ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

கோனேரியப்பனையங்கார் பாடியருளிய

# சீரங்கநாயகியாரூசல்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# சீரங்கநாயகியாரூசல்

## காப்பு

முருகூரு மகிழ்மாலை அணியுமார்பன்
 முத்தமிழன் கவித்தலைவன் முனிவர் வேந்தன்
திருகூரு மனத்திருணீக் குதயபானு
 சீ பராங்குசயோகி திருநாவீறன்
அருகூருந் தண் பொருநை வழுதி நாடன்
 அஃகமலம் பாடினான் அன்னமேறி
குருகூரன் சடகோபன் காரிமாறன்
 கோகனக மலரடியின் குணங்கள் போற்றி

## நூல்

நீராழி நிறத்தரங்கரடிகள் வாழ
 நெடுமகுடப் பணிவாழக் கருடன் வாழப்
பேராழி செலுத்திய சேனையர் கோன் வாழப்
 பேய் பூதன் பொய்கை முதற்பதின்மர் வாழ
ஓராழிக் கதிர் வாழத் திங்கள் வாழ
 உம்மடியார் மிகவாழ உலகம் வாழச்
சீராழி சங்குகதை சிலைவாள் வாழச்
 சீரங்க நாயகியார் ஆடிர் ஊசல் ‖ **1** ‖

துங்கமலர்ப் பந்தரின் கீழ்ப்பதுமராகத்
 தூணிறுத்தி வயிரவிட்டம் தொகுத்து மீதில்

தங்க நெடுஞ்சங்கிலி விட்டதில் மாணிக்கத்
    தவிசு புனைந்தலங்கரித்த ஊசல் மீதில்
மங்கலநாண் திருவாவார் ஆடிர் ஊசல்
    மதிலரங்கர் தமக்கினியார் ஆடிர் ஊசல்
செங்கமல மாளிகையார் ஆடிர் ஊசல்
    சீரங்க நாயகியார் ஆடிர் ஊசல் ‖ **2** ‖

கடிமலரு மதுகரமும் குழலில் ஆடக்
    கத்தூரி உடன்வேர்வும் முகத்தில் ஆட
நெடுவிழியும் மணித்தோடும் செவியில் ஆட
    நேர்வளையும் சூடகமும் கரத்தில் ஆட
வடமணியும் கண்டிகையும் தனத்தில் ஆட
    மாகலையும் மேகலையும் மருங்கில் ஆடத்
திடமறையும் பரிபுரமும் பதத்தில் ஆடச்
    சீரங்க நாயகியார் ஆடிர் ஊசல் ‖ **3** ‖

கலைமடந்தை வணங்கி ஒரு வடம் தொட்டாட்டக்
    கற்புடைய வள்ளி ஒரு வடந்தொட்டாட்ட
மலைமடந்தை பரிவில் ஒரு வடந்தொட்டாட்ட
    வானவர் கோன் மடந்தை ஒரு வடந்தொட்டாட்ட
அலர்மடந்தை நிலமடந்தை உலகம் வாழ
    அருள் மடந்தை பொருண்மடந்தை அழகார் நெற்றிச்
சிலை மடந்தை திருமடந்தை ஆடிர் ஊசல்
    சீரங்க நாயகியார் ஆடிர் ஊசல் ‖ **4** ‖

காரனைய திருவரங்க மணவாளர்க்குக்
    கண்களிப்ப மனமுருக அறிவு சோர

மூரலெழப் புளகமுறப் புயம் பூரிப்ப
    முகமலர மெய் குழைய மோகமேற
ஆரமுதே பசுங்கிளியே முத்தே பொன்னே
    அன்னமே என்னம்மே அழகின் பேறே
சீரிய சிற்றிடை அணங்கே ஆடிர் ஊசல்
    சீரங்க நாயகியார் ஆடிர் ஊசல் ‖ **5** ‖

வீறு பொய்கை பூதத்தார் இரு பால் ஞான
    விளக்கேந்த மயிலையர் கோன் வியந்து காண
மாறன்மறைத் தமிழ் மதுரகவி நின்றேத்த
    வாழ் குலசேகரன் பாணன் கலியன் போற்ற
ஆறுசமயத் திருந்தோன் அருகில் வாழ்த்த
    அணிபுதுவை வேதியன் பல்லாண்டு பாடத்
தேறு தொண்டரடிப்பொடிதார் அடியிற் சூட்டச்
    சீரங்க நாயகியார் ஆடிர் ஊசல் ‖ **6** ‖

நாதமுனி தவமாக மாறன் பாட
    நயந்தெழுத வேதனெழுத் தழிந்த வாறும்
பொதன் எதிராசன் வளையாழி மண்ணோர்
    புயத்தெழுதக் கூற்றின் எழுத்தழிந்த வாறும்
ஏதமில் கூரத்தாழ்வான் பதக்குண்டென்றே
    எழுதிட வாதியர்கள் எழுத்தழிந்த வாறும்
தீதில் குணத்தடியார்கள் திரண்டு வாழ்த்தச்
    சீரங்க நாயகியார் ஆடிர் ஊசல் ‖ **7** ‖

தருக்குடனே உமது திருவுளத்துக் கேற்கத்
    தங்கள் தங்கள் பணிவிடைகள் தலைமேற்கொண்டு

வருக்கமுடன் பத்துவகைக் கொத்துளோரு
மற்றுமுள்ள பரிகாரமும் வந்து சூழ
அருக்கன் என முடிவிளக்க அழகு வீற
அண்டர்கள் பூமழை பொழிய அடியார் போற்றச்
செருக்கி விளையாடி உகந்தாடிர் ஊசல்
சீரங்க நாயகியார் ஆடிர் ஊசல் ‖ **8** ‖

மின்றாவு கொடிமதில் சூழ் கூரவேந்தன்
வேதாசாரியன் அன்னை ஆடிர் ஊசல்
பின்றாத பரசமயக் குறும்பறுக்கும்
பெரிய நம்பி உளத்துறைவார் ஆடிர் ஊசல்
கந்தாடைக் குலத்தில் வரும் அழ கோன் வாழக்
கருணைவிழிக் கடையருள்வார் ஆடிர் ஊசல்
செந்தாரும் பசுந்தாரும் புடையுலாவச்
சீரங்க நாயகியார் ஆடிர் ஊசல் ‖ **9** ‖

ஆரணஞ்சேர் வில்லிபுத்தூர் உறையூர் வாழ
அவதரித்த நாயகியார் ஆடிர் ஊசல்
பேரணி பூண் அழகுடையார் தாமே என்னும்
பெண்டுகள் தம் நாயகியார் ஆடிர் ஊசல்
நாரணர் பூரணர் பெரிய பெருமாள் எங்கள்
நம் பெருமாள் நாயகியார் ஆடிர் ஊசல்
தேரணியு நெடுவீதி புடை சூழ் கோயில்
சீரங்க நாயகியார் ஆடிர் ஊசல் ‖ **10** ‖

கோலமந்தா நிலமுலவ அதனால் ஆடும்
கோகனகத்திருந்தாடும் அன்னம் போல

மாலரங்கர் திருமேனி வண்மை யாலும்
    மழைமுகில் கண்டுகந்தாடு மயிலும் போல
வேலை கடைந்திட அதனில் எழுந்த போது
    வெண்டிரைமேல் அசைந்தாடும் வீறு போலச்
சீலமுடன் மாணிக்கத் தவிசில் ஏறிச்
    சீரங்க நாயகியார் ஆடிர் ஊசல் ‖ **11** ‖

குடமாடிச் சீராடி வெண்ணெய்க் காடிக்
    குரவைதனைப் பிணைந்தாடிக் கோளராவின்
படமாடி விளையாடும் அந்நாள் அந்தப்
    பரமன் உரத் திருந்தாடும் படியே போல
வடமாடக் குழையாட இடை தள்ளாட
    வளையாட விளையாடி மாலை ஆடத்
திடமாடக் கொடியாடத் திகழும் கோயில்
    சீரங்க நாயகியார் ஆடிர் ஊசல் ‖ **12** ‖

கொந்தாரும் குழலசைய ஆடிர் உசல்
    குலமகரக் குழையசைய ஆடிர் ஊசல்
நந்தாரும் கரமசைய ஆடிர் ஊசல்
    நல்கியநூல் இடையசைய ஆடிர் ஊசல்
சந்தாரும் தனமசைய ஆடிர் ஊசல்
    தரளமணி வடமசைய ஆடிர் ஊசல்
செந்தாளில் சிலம்பசைய ஆடிர் ஊசல்
    சீரங்க நாயகியார் ஆடிர் ஊசல் ‖ **13** ‖

கரிய குழலசையும் என வரிவண்டார்ப்பக்
    கழையணித்தோள் அதிரும் எனத்தொடிகள் ஆர்ப்ப

மருமலர்க்கை அலங்கும் என வளைகள் ஆர்ப்ப
வடிவமெலாம் வருந்தும் என மறைகள் ஆர்ப்ப
இரு முலைகள் குலுங்கும் என வடங்கள் ஆர்ப்ப
இடை ஒசிந்தே இறும் என மேகலைகள் ஆர்ப்பத்
திருவடிகள் சிவக்கும் எனச் சிலம்பும் ஆர்ப்பச்
சீரங்க நாயகியார் ஆடிர் ஊசல் ॥ **14** ॥

மேவிய பங்கயன் தவம் செய்திறைஞ்சும் கோயில்
வேணியரன் புராணநூல் விளம்பும் கோயில்
தாவுதிரைக் காவேரி புடை சூழ் கோயில்
சந்திரவாவியின் மருங்கு தழைத்த கோயில்
பாவளர்ச் சத்தாவரணம் உடைய கோயில்
பணி அணிசேர் ஓங்காரமானக் கோயில்
தேவர் தொழும் திருவரங்கம் பெரிய கோயில்
சீரங்க நாயகியார் ஆடிர் ஊசல் ॥ **15** ॥

தார் அங்கத் திருவரங்கர்க்கூசல் பாடிச்
சாத்தினான் பேரன் எனுந்தன்மை யாலும்
ஆருங்கண்டே தெளியும் அவன் சொல் பாட்டின்
அதியசயத்தை அறிவன் என்னும் ஆசையாலும்
பாரெங்கும் புகழ்வேத வியாச பட்டர்
பதம்பணி கோனேரியப்பன் புன் சொல்லாகச்
சீரங்க நாயகியார்க்கொரு பத்தைந்து
திரு ஊசல் திருநாமம் செப்பினானே ॥ **16** ॥

சீரங்கநாயகியாரூசல் முற்றிற்று